**சார்பு நீதிமன்றம், திருவாரூர்**
**முன்னிலை : திரு.C.ராஜேஷ், B.A., B.L.,**
**சார்பு நீதிபதி, திருவாரூர்**

2026–ஆம் ஆண்டு ஜுலை மாதம் 13–ஆம் நாள், திங்கள் கிழமை
(திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீ பராபவ வருடம், ஆனித்திங்கள் 29– ம் நாள்)

**<u>அசல் வழக்கு எண் : 125 / 2021</u>**
**<u>CNR No : TNTV03-000613-2021</u>**

ராஜேந்திரன் ... வாதி

எதிர்

1. குருமூர்த்தி
2. ராஜிவ்காந்தி ... பிரதிவாதிகள்

**<u>வழக்கு மதிப்பீட்டு விபரம்</u>**

| | | |
|---|---|---|
| வழக்கின் தன்மை | : | விளம்புகை பரிகாரம் மற்றும் வசப்பரிகாரம் |
| வழக்கின் மதிப்பு | : | ரூ.9,51,192/– + 5000/– = 9,56,192/– |
| வழக்கு சட்டப்பிரிவு | : | தமிழ்நாடு நீ.ம.க.ச.பிரிவு 25 (a) and 25 (d) |
| செலுத்தப்பட வேண்டிய நீதிமன்ற கட்டணம் | : | ரூ.28,685.76 |
| செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம் | : | ரூ.28,686/– |

/உத்தரவுப்படி/

சிரஸ்தார்

**சார்பு நீதிமன்றம், திருவாரூர்**
**முன்னிலை : திரு.C.ராஜேஷ், B.A., B.L.,**
**சார்பு நீதிபதி, திருவாரூர்**

2026–ஆம் ஆண்டு ஜுலை மாதம் 13–ஆம் நாள், திங்கள் கிழமை
(திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீ பராபவ வருடம், ஆனித்திங்கள் 29– ம் நாள்)

**அசல் வழக்கு எண் : 125 / 2021**
**CNR No : TNTV03–000613–2021**

திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் தாலுக்கா, திருவிடைவாசல் & அஞ்சல், எண்.2/83, ஆயியாரம்மன் கோயில் தெரு, என்ற முகவரியில் வசித்து வரும், கனகசபை குமாரர், இந்து, 74 வயதுள்ள K.ராஜேந்திரன். ... வாதி.

– எதிர்–

1. திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் தாலுக்கா, திருவிடைவாசல் & அஞ்சல், ஆயியாரம்மன் கோயில் தெரு, என்ற முகவரியில் வசித்து வரும், ரெத்தினம் குமாரர், இந்து, சுமார் 75 வயதுள்ள R.குருமூர்த்தி.

2. திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் தாலுக்கா, திருவிடைவாசல் & அஞ்சல், ஆயியாரம்மன் கோயில் தெரு, என்ற முகவரியில் வசித்து வரும், R.குருமூர்த்தி குமாரர், இந்து, சுமார் 35 வயதுள்ள K.ராஜீவ்காந்தி. ... பிரதிவாதிகள்.

தாவா சொத்துக்கள் அ மற்றும் ஆ வாதிக்கு சொந்தமானவை என்று விளம்புகை செய்து உத்தரவிட்டும், அதனுடன் இணைந்த பரிகாரமாக ஆ பட்டியல் சொத்தை வாதி வசம் ஒப்படைக்க வசப்பரிகாரம் வழங்கியும், ஆ பட்டியல் சொத்தை 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு 03.02.2015–ல் ஆவண எண்.105/2015–ல் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் செல்லக்கூடியதல்ல வாதியை கட்டுப்படுத்தக்கூடியதல்ல என்று விளம்புகை செய்து உத்தரவிட வேண்டியும், வழக்கின் செலவுத்தொகையை பிரதிவாதிகள் வாதிக்கு

கொடுக்க வேண்டியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கலான நாள் 15.11.2021, 22.11.2021
வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் 23.11.2021

வழக்குமூலம் 06.08.1950, 01.04.1947, 21.12.1991, 02.06.1997, 20.02.1991, 11.03.2015, 19.04.2017, 11.06.2021, 10.10.2021, 13.10.2021 ஆகிய தேதிகளில் கூத்தாநல்லூர் சார்பதிவகம், குடவாசல் தாலுக்கா, 93.நீர், திருவிடவாசல் வருவாய் கிராமம், ஆயியாரம்மன் கோவில் தெருவில் வழக்கு உற்பத்தி.

வாதி கோரும் விளம்புகை பரிகாரம் அதன் உடன் இணைந்த பரிகாரமான வசப்பரிகாரத்திற்கு தமிழ்நாடு நீதிமன்றக்கட்டண சட்டப்பிரிவு 25 (a) and (d) ன் படி பொருமான் ரூ.9,56,192/- அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச்சட்டப்பிரிவு 25 (a) and 25 (d)-ன் கீழ் ரூ.28,685.76 செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்குகள் இரண்டும் கடந்த 15.06.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்ததில் அ.வ.எண்.125/2021-ல் வாதி மற்றும் அ.வ.எண்.167/2022-ல் 4ஆம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு.T.P.S.மணிக்கண்ணன் M.Com., B.L.,** அவர்கள் ஆஜராகியும், அ.வ.எண்.125/2021-ல் பிரதிவாதிகள் மற்றும் அ.வ.எண்.167/2022-ல் வாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு.R.கோவிக்கண்ணன் B.A., B.L.,** அவர்கள் ஆஜராகியும், அ.வ.எண்.167/2022-ல் 1 முதல் 3 பிரதிவாதிகள் தோன்றாதரப்பினராக கொண்டும், இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்..

## <u>தீர்ப்பாணை</u>

1. இவ்வழக்கு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2. தாவா அ மற்றும் ஆ பட்டியல் சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்துஉத்தரவிடப்படுகிறது.

3. தாவா ஆ பட்டியல் சொத்தின் சுவாதீனத்தை பிரதிவாதிகள் 2 மாதத்திற்குள் வாதி வசம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

4. 03.02.2015–ம் தேதி 1ம் பிரதிவாதியால் 2ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியதல்ல மற்றும் வாதியை கட்டுப்படுத்தாது என விளம்புகை செய்து உத்தரவிடப்படுகிறது.

5. செலவுத்தொகையில்லை.

## செலவுத்தொகை பட்டியல் விபரம்

| வாதி தரப்பு | Rs. P. | பிரதிவாதிகள் தரப்பு |
|---|---|---|
| வழக்குரையில் நீ.ம.க. | 28686.00 | செலவுத்தொகைப்பட்டியல் தாக்கல் இல்லை. |
| வக்காலத்து | 10.00 | |
| படி மெமோ | 90.00 | |
| தட்டச்சுக்கூலி | 100.00 | |
| வழக்கறிஞர் ஊதியம் (சீனியர்) | 11430.00 | |
| வழக்கறிஞர் ஊதியம் (ஜுனியர்) | 1000.00 | |
| **மொத்தம்** | **41316.00** | |
| **முழுமையாக்கப் பட்ட தொகை** | **41316.00** | |

## சொத்து விவரம்

**'அ' பட்டியல் சொத்துக்கள் விவரம்**

நாகப்பட்டினம் பதிவு மாவட்டம், கூத்தாநல்லூர் சார்பதிவகம், குடவாசல் தாலுக்கா, 93.நீர், திருவிடவாசல் வருவாய் கிராமம், திருவிடவாசல் கிராமம், ஆயியாரம்மன் கோவில் தெருவில்,
பழைய புல எண்.13/24, புதிய புல எண்.104-7, 104-8
10 செண்ட் பூரா, அதில் உள்ள ஓட்டு வீடு மதிப்பு ரூ.1,55,430/-

**'ஆ' பட்டியல் சொத்துக்கள் விவரம் (வசம் வர வேண்டிய சொத்து விவரம்)**

நாகப்பட்டினம் பதிவு மாவட்டம், கூத்தாநல்லூர் சார்பதிவகம், குடவாசல் தாலுக்கா, 93.நீர், திருவிடவாசல் வருவாய் கிராமம், திருவிடவாசல் கிராமம், ஆயியாரம்மன் கோவில் தெருவில்,

புல எண். 104-7 (நூற்றி நான்கில் ஏழு) நத்தம் மனை பூரா,

தெருவிற்கு வடக்கு, வடிகால் கண்ணிக்கு தெற்கு, க.ராஜேந்திரன் வீடு மனைக்கும் மேற்கு, ரெத்தினவேல் ஆசாரி வீட்டுக்கும் கிழக்கு இதற்குட்பட்டது.
61 சதுர மீட்டர் உள்ள அடிமனையும், அதில் சுமார் 90 வருடங்களுக்கு முன்பு மண் சுவர், நாட்டு மரம், மூங்கில், நாட்டு ஓடு இவைகளால் கிழமேல் கீழ்புறம், மேல்புரம் தாய் சுவர்கள் உள்பட ஜாதியடி 13-க்கும், தென்வடல் ஜாதியடி 35க்கும் சதுர அடி 455-க்கு சதுர மீட்டர் 42.27 அளவில் கட்டப்பட்டுள்ள பழைய நாட்டு ஓட்டுவில்லை (வீடு மதிப்பு ரூ.1,55,430/-)

2026-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13-ஆம் நாளில் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையிடப்பட்டு வழங்கப்பட்டது.

C RAJESH
Digitally signed by C RAJESH
Date: 2026.07.30 12:06:02 +0530

சார்பு நீதிபதி,
திருவாரூர்.

Decree
OS.No.125/2021
Dated: 13.07.2026